**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 15.04.2026**
**EA.No.19/2025 in REP.16/2015**
**வழக்கு சாட்சி RW.2 சித்தையன், த/பெ.பழனியப்பன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) மனுதாரர்கள் அனைவரும் மாரியண்ணன் மகன் பழனியப்பனின் வாரிசுகள் என்றும், அவர் தான் 1ம் எதிர்மனுதாரர் என்றால் சரிதான். மேற்கண்ட மாரியண்ணனின் மகன் பழனியப்பன் என் தந்தையின் சித்தப்பா ஆவார். தாவா சொத்து பூர்வீக சொத்து என்றும், அது என் தந்தைக்கும், மேற்கண்ட மாரியண்ணனின் மகன் பழனியப்பனுக்கும் பாகமாக வந்த சொத்து என்றால் சரிதான். மேற்கண்ட சொத்தை என் தந்தையும், மேற்கண்ட என் தந்தையின் சித்தப்பாவான மாரியண்ணனின் மகன் பழனியப்பனும் பிரித்து கொண்டார்களா என்றால் பிரித்து கொண்டார்கள்.

2) அ.வ.எண்.135/2001 என்ற வழக்கை தாண்டவன் அவர்கள் தாக்கல் செய்தபோது அதனுடன் அவரது பாகபிரிவினை பத்திரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. மேற்கண்ட தாண்டவன் அவர்களும், அவரது சகோரர்களும் பாகம் பிரித்துகொண்டதாக நான் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. அந்த பாகபிரிவினையானது மனுதாரர்களை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இந்த தாவாவையும், மேற்கண்ட வழக்கையும் ஒருசேர நடத்த நான் அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல.

3) இரண்டாம் மேல்முறையீடு தற்போதும் நிலுவையில் தான் உள்ளது என்றால் சரியல்ல, 02.07.2021ல் தீர்ப்பாகிவிட்டது, அதை இந்நீதிமன்றத்திலும் தாக்கல் செய்துள்ளோம். நான் சொல்லும் ச.எண்.62/1E என்பது நிலையில் இல்லை என்றும் ச.எண்.62/5A என்ற எண் தான் அந்த இடத்தில் உள்ளது என்றும், நான் இல்லாத சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்து மனுதாரர்களை ஏமாற்றுகிறேன் என்றால் சரியல்ல. ஆணையாளர் நியமனம் செய்தததே மனுதாரர்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல.

மனுதாரர்கள் சுயமாக ஆவணங்களை தேடி எடுத்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மற்ற எதிர்மனுதாரர்களிடம் மனுதாரர்கள் எந்த ஆவணமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல.

4) மனுதாரர்கள் ஏற்கனவே மனு செய்ததாக தவறான சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர்கள் பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்து அதில் முதல் நிலை தீர்ப்பாணையும் பெற்றுள்ளார்கள் என்றும், அதன் விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அந்த வழக்கு குறித்து எனக்கு தெரியும் என்றும், இருந்போதும் என்னை தரப்பினராக சேர்க்கவேண்டும் என்று நான் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த வழக்கை பற்றி எனக்கு தெரியாது. மனுதாரர்கள் அவர்களுக்கு உரிமையுள்ள சொத்தை பொறுத்து அனுபவம் செய்து வருவதை மற்ற எதிர்மனுதாரர்களுடன் சேர்ந்து நான் பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

5) இந்த மனு சொத்தானது பழனியப்பனுக்கு சொந்தமானது என்றும், அதனால் அதை அவரது வாரிசுகள் பாகம்பிரித்து கொள்வதற்கு எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் உள்ளது. அந்த சொத்திற்கும், எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லாததால் அதற்கு ஆட்சேபனை தெரிவிப்பது தவறு என்றால் சரியல்ல. மனுதாரர்கள் கோரிக்கை நியாயமானது என்பதால் மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.